R4867

# INERESTING QUESTIONS
# ஆவலைத் தூண்டும் கேள்விகள்

### பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்கள் பிரகாரத்தில் குறிப்பிடப்படவில்லை

**கேள்வி:** ஆசாரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்தினால் பழைய ஏற்பாட்டு பாத்திரர்கள் குறிப்பிடப்பட்டார்களா?

**பதில் :** அவர்கள் காலத்தில் மெய்யான ஆசாரியன் வந்திருக்கவில்லை. மெய்யான ஆசாரிப்புக் கூடாரமும் பிரகாரமும் தீர்மானிக்கப்படவில்லை. ஆனால் அவர்களது இருதய நிலைமை, அவர்களது நடத்தையில் வெளிப்படுத்தப்பட்டது போல் அவர்கள் விசுவாச வீட்டாரின் அங்கங்களாக இருக்க வேண்டும். முடிவாக அவர்கள் திரளான கூட்டத்தில் மெய்யான பிரகார நிலைமையில் மெய்யான லேவியர்களாக ஒரு பங்கை பெறுவார்கள் என்பது எங்களது புரிந்து கொள்ளுதல் ஆகும்.

### பலியானது இரு வெவ்வேறான கருத்துகளில் பயன்படுத்தப்பட்டது

**கேள்வி :** "ஏனென்றால் எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாக பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியனால் கொண்டு வரப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளையத்துக்கு புறம்பே சுட்டெரிக்கப்படும்." (எபிரேயர் 13:11) இது பாவ நிவாரண பலி மகா பரிசுத்த ஸ்தலத்தில் செய்யப்படுகிறதை காண்பிக்குமா?

**பதில் :**வேதாகமத்தில் ஆசாரிப்பு கூடாரத்தைக் குறித்து மொழி பெயர்த்தவர்கள் பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம், பரிசுத்த இடங்கள் முதலானவைகளை சரியாக மொழி பெயர்க்காதது போல் தெரிகிறது. ஆசிரிப்புக் கூடாரத்தில் பல்வேறு பகுதிகளை குறித்த இந்த பதங்கள் யூதர்களால் பல்வேறு உணர்வுகளில் பயன்படுத்தப்பட்டன என்பதை அவர்கள் உணரவில்லை. நமது இந்த வசனம் கீழே கொடுத்துள்ளபடி சரியாக மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். "எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவ நிவாரண பலியாக மகா பரிசுத்த ஸ்லத்துக்குள் பிரதான ஆசாரியனால் கொண்டு வரப்படுகிறதோ அந்த மிருகங்களின் உடல்கள் பாளையத்துக்கு புறம்பே எரிக்கப்படுகின்றன. " பலி என்பது வேத வாக்கியங்களின்படி இரண்டு விதமான கருத்தில் பயன்படுத்தப்பட்டது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த வார்த்தை ஒரு அர்த்தத்தில் நமது கர்த்தர், பிதாவின் சித்தத்துக்கு தம்மை ஒப்புக்கொடுக்கும் போது, ஞானஸ்நானத்தில் தம்மையே ஒப்புக்கொடுத்தார். யோர்தானில் தம்மை ஒப்புக்கொடுத்த போது அதுவே தம்மை பலியாக ஒப்புக்கொடுத்ததாக இருந்தது. அவர் தமது ஜீவனை கல்வாரியில் கொடுத்த போது அவர் தமது சரியான பலியை நிறைவேற்றினார். ஆனால் அவர் உன்னதங்களில் ஏறி தேவனுடைய சமூகத்தில் நமக்காக பிரத்தியட்சமாகி பாவ நிவாரண பலியை ஒப்புக்கொடுப்பது பிரதான ஆசாரியனுடையதாக இருந்தது. கிருபாசனத்தில் இரத்தத்தை தெளிப்பது மகா பரிசுத்த ஸ்தலத்தில் செய்யப்பட்டது. ஆனால் பாவ நிவாரண பலியை ஒப்புக்கொடுத்தது யோர்தானில் செய்யப்பட்டது. நிழலில் காளை பலியிடப்பட்ட போது நடந்தது.

### இரண்டு பலி பீடங்கள் மாறுபட்டன

**கேள்வி :** "நமக்கு ஒரு பலிபீடமுண்டு, அதற்குரியவைகளை புசிக்கிறதற்கு கூடாரத்தில் ஆராதனை செய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை." (எபிரேயர் 13:10) இந்த வசனத்தின் பொருள் என்ன?

**பதில் :** இந்த வசனத்தில் அப்போஸ்தலர் லேவியரின் ஆசாரியத்துவத்தையும், ஆசிரிப்பு கூடாரத்தில் அவர்களின் ஊழியங்களையும் அவர்கள் சமூகத்து அப்பத்தை சாப்பிடுகிற பரிசுத்த ஸ்தலத்தின் மேசையையும், மெய்யான ஆசிரிப்பு கூடாரம் மற்றும் அதன் மேலான மேசையுடன் வித்தியாசப்படுத்தி காண்பிக்கிறார். இது தொடர்பாக அவர் கூறுவது என்னவென்றால், ஆரோனின் ஆசாரியத்துவத்தை பொறுத்த வரை சபை மாத்திரமல்ல நமது கர்த்தராகிய இயேசு கூட ஆசாரியராக முடியாது; ஆசாரியத்துவம் லேவி வம்சத்திலிருந்து வந்தது. இயேசு, யூதா என்கிற வேறு வம்சத்திலிருந்து வந்தவர். ஆகையால் இயேசு புவியில் இருந்தால் அவர் ஒரு ஆசாரியராக ஆகியிருக்க முடியாது. ஆனால் இப்பொழுது தேவன், மெல்கிசேதேக் என்கிற வேறொரு ஆசாரியத்துவ முறைமையை கொண்டு வரும் நோக்கத்தில் இருந்தார். இது குறித்து தாவீது கூறுகிறதாவது: "நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலும் இருப்பார்." (சங்கீதம் 110:4; எபிரேயர் 5:6) கிறிஸ்து மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஆசாரியராயிருந்தால், அவர் ஆரோனின் முறைமையின் ஆசாரியராக இருக்க முடியாது.

பிறகு, நாம் ஆசாரியர்களாக நிழலான பரிசுத்த ஸ்தலம் அல்லது மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்ல உரிமையில்லை என்பதையும், ஆரோனின் வீட்டார் நமது இடத்திற்கு வர உரிமையில்லை என்பதையும் காண்பிக்கிறது என்று அப்போஸ்தலர் ரூபகாரம் பண்ணியிருக்கிறார். நாம் நுழைகிற மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்குள் வர அவர்களுக்கு உரிமையில்லை. அவர்கள் ராஜரீக ஆசாரியர்களானால் அவர்கள் நுழையலாம். ஆனால் அவர்கள் ஆரோனின் ஆசாரியத்துவத்தில் நிற்பதால், அந்த சலுகை அவர்களுக்கு இல்லை. இப்படியாக அவர் ஆரோன் மற்றும் மெல்கிசேதேக்கின் முறைமைகளுக்கு இடையேயுள்ள வேறுபாட்டை காண்பிக்கிறார். றாம் "மேலான பலிகளைப் பெற்றிருக்கிறோம்." நாம் மேலான ஊழியங்களைப் பெற்றிருக்கிறோம். நாம் மேலான இடத்தை பெற்றிருக்கிறோம். அவர்கள் பெற்றிருந்தது அனைத்துமே நிழலான தாழ்வானதாக இருந்தது.

### மகா பரிசுத்த ஸ்தலத்தில் சுகந்த வர்க்கம் நிறைந்திருத்தல்

**கேள்வி :** பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் ஆட்டின் இரத்தத்துடன் நுழைவதற்கு முன் அது தூபவர்க்கத்தால் நிறைந்திருப்பது அவசியமா?

**பதில் :** பாவ நிவாரண நாளில் தூபவர்க்கத்தை அர்ப்பணிப்பது பிரதான ஆசாரியன் சர்வ வல்லவரால் அங்கீகரிக்கப்படுவதற்கு அவசியமாக இருந்தது. மேலும் தேவனுடைய பிரசன்னத்தில் தோன்றுவதற்கு அவனது தகுதியை வெளிப்படுத்தினது. ஆகையால் இதைத் தவிர வேறு எந்த பலியும் அங்கு தேவை இல்லை. பாவ நிவாரண வேலைகள் அனைத்தும் இரண்டு பாகமாக பிரிக்கப்பட்டது. உதவி ஆசாரியர்கள் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் செல்வதாக காண்பிக்கப்பட்டால், அப்பொழுது ஒவ்வொருவரும் அங்கே

நுழைவதற்கு முன்பு தூபவர்க்கத்தை செலுத்துவது அவசியமானதாக இருந்தது.

நாம் தனிப்பட்டவர்களாக அல்ல, ஆனால் கிறிஸ்துவின் சரீர அங்களாக நாம் குறிப்பிடப்படுகிறோம். ஆகையால் ஒரு தடவைக்கு மேல் தூபவர்க்கத்தை செலுத்துவது அவசியமல்ல. எனினும் தூபவர்க்கம் பரிசுத்த ஸ்தலத்திலும் மகா பரிசுத்த ஸ்தலத்திலும் இருப்பது அவசியம். பலியானது பரலோக பிதாவானவரால் பாராட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. எப்பொழுதும் பாராட்டப்படும்.

## இரண்டும் நீதிக்கு தொடர்பானவை

**கேள்வி :** நிழலில் தூபவர்க்கம் நீதியை திருப்திப்படுத்தியதா? இல்லையென்றால், நீதியை திருப்திப்படுத்துவது எப்படி நிறைவேற்றப்பட்டது? ஏன் தூபவர்க்கம் எரிக்கப்பட்டது.?

**பதில் :** தூப வர்க்கமும் இரத்தமும் நீதியை திருப்திப்படுத்த வேண்டியதாக இருந்தன. தூபவர்க்கம் கிருபாசனத்தை மூட வேண்டும் என்று நாம் வாசிக்கிறோம். (லேவியராகமம் 16:13) வேறு வார்த்தையில் சொல்லுவோமானால் தூபவர்க்கத்தின் புகை அங்கே செல்லாதிருந்தால் பிரதான ஆசாரியன் உயிரோடு இருந்திருக்கமாட்டான். நமது கர்த்தர் தமது ஜீவனை மீட்கும் பொருளாக கொடுத்திராவிட்டால், அவர் தமது ஜீவிக்கும் உரிமையை இழந்திருப்பார் என்று இது காண்பிக்கிறது. அர்ப்பணத்தில் இதை அவர் ஏற்றுக்கொண்டு அவரது பூமிக்குரிய உரிமைகளை அர்ப்பணித்திருந்தார். அது உண்மைத்தன்மையை நிரூபித்தால் அவர் திரைக்கு அப்பால் மேலான ஜீவனை பெறுவார். ஆகையால் நிழலில் பிரதான ஆசாரியன் திரைக்கு அப்பால் தனக்கு முன்பாக தூபவர்க்கத்தின் புகையை அனுப்புதல் நீதியை திருப்திபடுத்துதலை குறித்தது. அது அவருக்கு திருப்திபடுத்துதலை குறிக்கிறது. மேலும் அவர் தேவையான நிபந்தனைகளை நிறைவேற்றியிருக்கிறார் என்று சாட்சிப்படுத்துகிறது.

ஆனால் சபை மற்றும் உலகத்தின் பாவங்களை நிவர்த்தி செய்வதற்கு இது தொடர்ந்து நிறைவேற்றப்பட்டது, தூப வர்க்கத்தினால் அல்ல, இரத்தத்தினால் ஆகும்.